மாயன் பன்னாட்டுத் தமிழாய்விதழ்
திறந்த அணுகல் மற்றும் சகமதிப்பாய்வு இதழ்

MAAYAN INTERNATIONAL JOURNAL OF TAMIL RESEARCH (MIJTR)
Open Access & Peer Reviewed Journal
E-ISSN : 2583-0449

Textual Source Material for the Composition of Seerapuranam: An Analytical Study

Dr. K.M.A. Ahamed Zubair

Assistant Professor (SG) of Arabic, Post Graduate and Research Department of Arabic, The New College, Chennai, India.

Manuscript ID :

MT19A0020

Volume : **2**

Issue : **2**

Month : **June**

Year : **2022**

Received: 31.12.2021

Revised: 07.01.2022

Accepted: 31.03.2022

Published: 28.06.2022

Pages : 1-6

ABSTRACT:

Seerapuranam was compiled by the poet Umar (1642-1703).The subject matter for the composition of this work was provided by the great religious scholar Shaik Sadaqathullah Appa. Poet Umar was at the patronage of two philanthropists namely Seethakathi and Abul Kasim Maraicayar. Umar started to compose the Seerapuranam by the request of Seethakathi. Umar has extensively praised Sadaqathullah Appa for providing the primary source material, in the introductory verses of Seerapuranam. This article intends to shed light on these historical events in an analytical way.

KEYWORDS:

Seerapuranam, Poet Umar or Umaruppulavar, Sadaqathullah Appa, Islamic Epic, Islamic Tamil Literature.

REFERENCES :

1. Abdur Rahim, M.R.M. Valimargal Varalaru (Tamil), Universal Publishers, Chennai, 1993.
2. Abdur Rahim, M.R.M. Islamia Kalai Kalanjiam (Tamil), Universal Publishers, Chennai, 1976.
3. Ahamed Zubair, K M A. Irai Gnana Chudar Imam Sadaqathullah Appa, Islamic Studies & Research Centre, Chennai, 2007.
4. Tayka Shuaib Aalim, Dr. Arabic, Arwi & Persian in Sarandib and Tamil Nadu, Imamul Aroos Trust, Chennai: 1993.
5. Kokan, Mohammad Yousuf, ArabIc & Persian in Carnatic ,Ameer & Co., Chennai, First Edition, 1989.

சீறாப்புராணம் இயற்றச் சிறப்புரை: ஓர் அலசல்

முனைவர் க.மு.அ. அஹ்மது ஜுபைர்,
உதவிப் பேராசிரியர், அரபித்துறை, புதுக்கல்லூரி, சென்னை, இந்தியா

கட்டுரைச் சுருக்கம்

சீறாப்புராணத்தை உமறுப் புலவர் (கி.பி.1642-1703) என்பவர் இயற்றினார். உமறுப் புலவர் மார்க்க மேதை செய்கு சதக்கத்துல்லா அப்பாவிடம் காப்பியம் இயற்றக் கருப்பொருள் பெற்றார். இவரை ஆதரித்த வள்ளல்கள் இருவர். ஒருவர் சீதக்காதி, இன்னொருவர் அபுல்காசிம் மரைக்காயர். சீதக்காதியின் வேண்டுகோளின்படியே உமறுப்புலவர் சீறாப்புராணத்தை எழுதத் தொடங்கினார். உமறுப்புலவர் தமது சீறாப்புராண காப்புப்பருவத்தில் சதக்கத்துல்லாஹ் அவர்களை அன்புச் சொற்களால் போற்றியிருக்கிறார். இவ்வரலாற்று நிகழ்வுகளை அலசுவதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

கருச்சொற்கள்

சீறாப்புராணம், உமறுப்புலவர்,சதக்கத்துல்லாஹ் அப்பா, இஸ்லாமியக் காப்பியம், இஸ்லாமியத் தமிழிலக்கியம்

முன்னுரை

சீறாப் புராணம் = சீறாவைக் கூறும் புராணம். சீறத் என்பது சீறத்துன்னபி என்ற அரபித் தொடரின் சுருக்கம் ஆகும். இதற்கு நபிகள் நாயகத்தின் வரலாறு என்று பொருள். சீறா என்பது சீறத் என்னும் அரபிச் சொல்லின் தமிழ் வடிவம். புராணம் என்பது பழமையான வரலாறு எனப் பொருள்படும். திருநபி அவர்களின் வரலாற்றைக் கூறும் புராணம் என்பது இதன் பொருள்.

சீறாப் புராணத்தை உமறுப் புலவர் (கி.பி.1642-1703) என்பவர் இயற்றினார். உமறுப் புலவர் மார்க்க மேதை செய்கு சதக்கத்துல்லா அப்பாவிடம் காப்பியம் இயற்றக் கருப்பொருள் பெற்றார். இவரை ஆதரித்த வள்ளல்கள் இருவர். ஒருவர் சீதக்காதி, இன்னொருவர் அபுல்காசிம் மரைக்காயர்.

இக்காப்பியம் மூன்று காண்டங்களைக் கொண்டது. அவை

1. விலாதத்துக் காண்டம்
2. நுபுவ்வத்துக் காண்டம்
3. ஹிஜ்ரத்துக் காண்டம்.

என்பவை ஆகும்.

விலாதத்துக் காண்டம்: சீறாப் புராணத்தின் முதல் காண்டம் விலாதத்துக் காண்டம் ஆகும். விலாதத் என்ற அரபிச்சொல்லுக்குப் பிறப்பு என்பது பொருள். இது இருபத்து நான்கு படலங்களைக் கொண்டு உள்ளது.

நுபுவ்வத்துக் காண்டம்: இது இரண்டாவது காண்டம். நுபுவ்வத் என்ற் அரபிச் சொல்லின் பொருள் நபித்துவம். இதில் இருபத்தொரு படலங்கள் உள்ளன.

ஹிஜ்ரத்துக் காண்டம்: இது மூன்றாவது காண்டம். ஹிஜ்ரத் என்ற அரபிச் சொல்லுக்கு இடம் பெயர்தல் என்பது பொருள். இது நாற்பத்தேழு படலங்களால் ஆனது.

சதக்கத்துல்லாஹ் அப்பா

இந்தியத் திருநாட்டின் ஞானம் விளைந்த பூமியாகத் திகழும் தமிழகத்திற்குப் பெருமை சேர்த்த இலக்கியச் சிற்பிகள் வரிசையில், அரபிக் கவியரசர் சதக்கத்துல்லாஹ் அப்பாவிற்கு தனிச்சிறப்பு உண்டு. தமிழகத்தின் காயல்பட்டிணத்தில் பிறந்து, கீழக்கரையில் வாழ்ந்து அரபி மொழியில் அற்புத ஞானம் வாய்க்கப் பெற்று, அரபு மண்ணில் பிறந்த அறிஞர்களும் கவிஞர்களும் வியந்து போற்றும் வண்ணம் நபிகள் நாயகத் திருமேனி மீது புனைந்து, யாத்தளித்த புகழ்ப்பாக்கள், நமது நாவில் நின்று ஒலிக்கும் நாள் வரை, அவரின் புகழ் ஓங்கி ஒலித்துக் கொண்டிருக்கும். பதினோரு கவிதைக் கோவைகளை அரபி மொழியிலே இயற்றி அரபி இலக்கியத்திற்கு வளம் சேர்த்துள்ளார்கள். இக்கவிதைகள் அரபுக் கவிஞர்களே போற்றும் வண்ணம் யாக்கப்பட்டுள்ளன. இவற்றின் மொத்த அடிகள் பத்தாயிரத்தைத் தாண்டி நிற்கின்றன.

சீறாப்புராணம் இயற்றச் சிறப்புரை வழங்கிய வரலாறு

தமிழகத்தில் ஆங்காங்கிருந்த முஸ்லிம் மக்கள் ஆர்வத்துடன் உபந்நியாசங்களைக் கேட்டு வருவது அன்றைய வழக்கமாக இருந்தது.அக்காலத்தில்,இராமநாதபுரச் சேதுபதி மன்னரின் அமைச்சராய் இலங்கி வந்த செய்கு அப்துல் காதிர் மரைக்காயர் என்ற ‘சீதக்காதி மரைக்காயர்’ அவர்கள் இதனை உணர்ந்து, முஸ்லிம்கள் அவர்களின் மார்க்க அடிப்படையில் அமைந்த பேரிலக்கியங்களின் உபந்நியாசங்களைக் கேட்கவேண்டும் என்ற பெருவிருப்பை

உடையவராயிருந்தார். தமது இவ்வேட்கையைத் தணிப்பதற்கான நல்வாய்ப்பை எதிர்நோக்கியும் காத்திருந்தார்.

இவ்வாறிருக்கையில், ஒருநாள் அரசாங்க வேலையின் நிமித்தம் சீதக்காதி மரைக்காயர் அவர்கள் எட்டயபுர அரசவைக்குச் செல்ல நேர்ந்தது. ஆங்கு உமறு என்ற பெயரில் ஒரு புலவர் இருக்கக் கண்டு, 'இவரே பெருமானாரின் வாழ்க்கையைக் காப்பியமாகப் பாட வல்லவர்' என்று ஓர்ந்தார். சின்னாட்கள் கழிந்த பின்னர் தமதில்லத்தில் நிகழ்ந்த விருந்தில் கலந்துகொள்ள உமறுப் புலவர் வந்த போது தமது உள்ளக் கிடக்கையை அன்னாரிடம் வெளியிட்டார் சீதக்காதி வள்ளல். புலவரும் இத்னை அடக்கத்துடன் ஏற்றுக்கொண்டார். எனினும், வள்ளல் பெருமானாரின் வரலாற்றுச் செய்திகளை உரையாகத் தருவது யார் என்ற கேள்வி எழுந்தது. சீதக்காதி வள்ளல் தம் ஆன்மீக வழிகாட்டியான 'இறைநேசர் ஷெய்கு சதக்கத்துல்லாஹ் அப்பா' அவர்களை அணுகி, பெருமானாரின் வாழ்க்கைச் சரிதையினைக் காவியமாகப் பாட உமறுப் புலவருக்கு உரை வழங்குமாறு கோரி நின்றார்கள்.

வள்ளல் சீதக்காதியும், உமறுப்புலவரும் பாலும் பழமும் போல், பல நாள் பழகி நட்புப்பெருகிய நேசர்களாக இருந்து வந்தனர். நபிகள் நாயகம் அவர்களின் சரிதையைத் தமிழில் யாத்துத் தரவேண்டுமென்று சீதக்காதி அவர்கள் உமறுப்புலவரை வேண்டினர். புலவரும் அதற்குச் சம்மதித்தார்கள். பின்பு சீதக்காதி, புலவரை தங்களின் ஆன்மீக ஆசானாகிய சதக்கத்துல்லாஹ் அவர்களிடம் அழைத்துச் சென்று புலவரை அறிமுகம் செய்து வைத்தார்கள். "நபிகள் நாயகம் அவர்களின் அருமை வரலாற்றைத் தேன் தமிழ்ப் பாக்களில் காப்பிய வடிவில் யாத்துத்தரக் கேட்டுக் கொண்டேன். அதற்குப் புலவரும் இசைந்துள்ளார்கள். தாங்கள் அதற்கான உரை நல்க வேண்டும்" என்று வேண்டிக் கொண்டார்.

சதக்கதுல்லாஹ் அவர்கள் உமறுப்புலவரை ஏறிட்டுப்பார்த்தார்கள். சரிகையலான முறுக்குத்தலைப்பாகை அணிந்து தாடியின்றி கிர்தா மீசை வளர்த்து, நகங்களில் மருதோன்றி இட்டுக் காட்சியளித்த அவரைப் பார்த்தும் "இவரா எம்பொருமானின் எழில் வரலாற்றை இன்பத் தமிழில் இயற்றத் தகுதி வாய்ந்தவர்!" என வெறுப்புற்று உரை தர மறுத்தார்கள். அவ்விருவரும் தம் தம் இல்லம் திரும்பினார்.

உமறுப்புலவர் மனவேதனையுடன் பள்ளிவாசலுக்குச் சென்று இறைவனிடம் அருள் வேண்டித் தலை குனிந்து அங்கு வீற்றிருந்தார்கள். தங்கள் நாட்டத்தை நிறைவேற்றி வைக்கும்படி வேண்டித் தொழுதார்கள். இல்லம் திரும்பிய உமறுப்புலவர் அண்ணல் நபியவர்களின் அருள் வேண்டியும், அவர்கள் காட்சி தந்து கைகொடுத்து உதவ வேண்டுமென்றும் அழுதார்கள். அழுது கொண்டே பாடினர்.

நானில வாழ்வை நான்மறை வாழ்வை

நபிகளின் வாழ்வை என் இதயம்

தானில வாழ்வைத் தபோதனர் வாழ்வைச்

சான்றவர் வாழ்வை மேலோகப்

பானில வாழ்வைப் பாவக வாழ்வைப்

பதிமதினா நகர் வாழ்வைக்

கானில வாழ்வை முகம்மது நபியைக்

கண்களால் என்று காண் குவனே

எனப் பாடிக் கொண்டிருக்கும் போதே கண்ணீரும் கம்பலையுமாகக் கண்ணயர்ந்தார்கள். நித்திரையிலே நபிகள் நாயகம், உமறுப்புலவரின் கனவில் தோன்றி "உமரே! என்னுடைய சதக்கு "ஷரீஅத்" என்னும் மார்க்க நெறியை அளவில்லா அன்பு கொண்டு காத்து வருவதால், உமது உள்ளத்தை அறியாது உமது உடமைகளைக் கண்டு உம்மைப் பார்த்து வெறுத்து உமக்கு உரை தர மறுத்தார். எனினும் நீவிர் என்மீது வைத்துள்ள அன்பை இன்றிரவே அவருக்கறிவித்து உமக்கு உரை தரும்படி கூறிவிட்டேன். "நீர் வைகறைத் தொழுகை தொழுதபின் அவரிடம் மீண்டும் செல்லும். அவர் உரை தருவார். பாடும்!" என்று கூறி மறைந்தார்கள்.

இக்கனவிற்குப்பின் எழுந்து தெளிந்த உமறுப்புலவர், உள்ளம் பூரித்து, மகிழ்ச்சியோடு "திருவினும் திருவாய்" என்னும் காப்புச் செய்யுளையும் அதற்கடுத்த செய்யுட்களையும் பாடி எழுதினார்கள். அதன்பின் சதக்கத்துல்லாஹ் அவர்களின் இல்லம் நோக்கி நடந்தார்கள். அவ்வாறே அண்ணல் நபி அவர்கள் சதக்கத்துல்லாஹ் அவர்களின் கனவிலும் திருத்தோற்றம் வழங்கி "சதக்கே! உமர் என்பவர் உம்மிடம் வந்தபொழுது, அவரின் உள்ள அழகைக் கவனியாது, வெளிப்புறத் தோற்றத்தை மட்டும் கண்டு எள்ளி உரைத்து அனுப்பிவிட்டீர். அவர் என்மீது கொண்ட அன்பு உண்மையாகவே அவரின் உள்ளத்தில் குடிகொண்டிருப்பதினால், மறுக்காமல் அவருக்கு உரைகொடுப்பீராக! நாளை விடியலில் உம்மை வந்து சந்திக்கும்படி அவருக்கு கட்டளையிட்டுள்ளேன். அவர் உம்மிடம் வருவார். நீவிர் அவருடைய சீறாவிற்கு உரை கொடும்" என்று அருள்வாய் கூறி மறைந்தனர்.

இவ்வழகிய கனவு கண்டு துயில் எழுந்த சக்கத்துல்லாஹ் உமறுப்புலவரின் வருகையை எதிர் நோக்கியிருந்தார்கள். அடுத்தநாளில் விடியலில் உமறுப்புலவர் தம் இல்லம் வந்ததும், புலவரை வெகு மரியாதையுடன் வரவேற்று, அகமலர முகமலர

உபசரித்துத் தங்கள் அருகில் இருக்க வைத்துக் கொண்டார்கள். பிறகு சீதக்காதி மரைக்காயரையும் அங்கு வரவழைத்து, தங்கள் இருவரும் கண்ட கனவைக் கூறி, மகிழ்ச்சியில் மூழ்கி, இறைவனைப் போற்றிப் புகழ்ந்தார்கள். அதன்பின் உமறுப்புலவர், கடவுள் வாழ்த்தாகப் பாடிக்கொண்டு வந்த செய்யுட்களை, சதக்கத்துல்லாஹ் அவர்களின் முன் பாடிக்காண்பித்தார்கள். அது கேட்டு மகிழ்ச்சி கொண்டு சதக்கத்துல்லாஹ் அவர்கள் உமறுப்புலவருக்கு நபிகள் நாயகம் அவர்களின் வரலாற்றை "தர்ஜுமத்துல் பஹ்ஜா" என்ற பெயருடன் இன்பத்தமிழில் உரை எழுதிக் கொடுத்ததோடு, தனது முதன்மையான மாணவர் மஹ்முது நெய்னா லெப்பை என்றழைக்கப்படும் "மஹ்மூது தீபி" என்பவர் பரங்கிப்பேட்டையில் வாழ்கின்றார். அவருக்கு நான் கடிதம் தருகிறேன். அவரிடம் செல்வீராக, அவர் மேலும் அதிகமான செய்திகளைத் தங்களுக்குத் தருவார் எனக் கூறி, கடிதம் எழுதிக் கொடுத்து உமறுப்புலவரை, பரங்கிப்பேட்டைக்கு அனுப்பிவைத்தார்கள். மஹ்மூது தீபி அவர்களும் தனது ஆசானின் கட்டளைக் கிணங்கி, அண்ணல் நபிகளின் வரலாற்றை அழகு தமிழில் ஒன்று திரட்டி உமறுப்புலவரிடம் கொடுத்தார்கள். இவ்வாறு புலவரின் வாயிலிருந்து கவி ஊற்றுப் பெருக்கெடுத்தது. சதக்கத்துல்லாஹ் அவர்கள் இவ்வாறாக அண்ணல் நபி அவர்களின் ஏனைய வரலாற்றுச் செய்திகளைப் பெற வழி வகை செய்தார்கள்.

"நபியின் சீறார் வரலாற்றைச் செப்பிய

பெரியார் சதக்கத்துல்லாஹ் அவர்களே"

என்று தமிழ்கூறும் நல்லுலகம் நவிலும், செந்தமிழ்ச் சீறா சிறப்புடன் அளித்த விந்தையார் உமறுப்புலவர் தமது சீறாப்புராண காப்புப்பருவத்தில் சதக்கத்துல்லாஹ் அவர்களை அன்புச் சொற்களால் போற்றியிருக்கிறார்.

நம்மையாளுடையான் வேதம் நபி திருவசனம் தீனோர்

சம்மதித்திடப் பாரெல்லாம் தழைக்கவே விளக்கம் செய்தோர்

இம்மையும் மறுமையும் பேரிலங்கிய சதக்கத்துல்லாஹ்

செம்மலர் அடியிரண்டுஞ் சிந்தையில் இருத்தினேனே

முதலில் இவ்வுரை தர மறுத்தபோது உமறுப்புலவர் மனம் வருந்தி அண்ணல் நபி மீது கவிதைகள் பாடிய வண்ணமே உறங்கி விட்டனர். அதுவே முதுமொழிமாலை என்னும் பெயருடன் விளங்குகிறது. இம்மாலையில் இடம் பெற்றுள்ள எண்பத்தெட்டுச் செய்யுள்களும் எழுசீர்க் கழிநெடிலடியாசிரிய விருத்தமாகும். இச்செய்யுள்கள் ஒவ்வொன்றும் "முகம்மதையென்று காண்குவனே" என்னும் ஈற்றடியுடன் முற்றுப் பெறுகின்றன.

முடிவுரை

சீறாப்புராணம் நபிகள் நாயகத்தின் வாழ்க்கையை மையமாக கொண்டது, இந்த நூலை 1842ல் அப்துல் காதிர் நெய்னா லெப்பை ஆலிம் முதலில் பதிப்பித்து வெளியிட்டார். இஸ்லாமியத் தமிழிலக்கியங்களில் சீறாப் புராணத்திற்கு தனியோர் இடமுண்டு. சீறாப்புராணம் இயற்றச் சிறப்புரை வழங்கிய சதக்கத்துல்லாஹ் அப்பாவிற்கும் தனியோர் இடமுண்டு.

துணைநூற்பட்டியல்

1. Abdur Rahim, M.R.M. Valimargal Varalaru (Tamil), Universal Publishers, Chennai, 1993.
2. Abdur Rahim, M.R.M. Islamia Kalai Kalanjiam (Tamil), Universal Publishers, Chennai, 1976.
3. Ahamed Zubair, K M A. Irai Gnana Chudar Imam Sadaqathullah Appa, Islamic Studies & Research Centre, Chennai, 2007.
4. Tayka Shuaib Aalim, Dr. Arabic, Arwi & Persian in Sarandib and Tamil Nadu, Imamul Aroos Trust, Chennai: 1993.
5. Kokan, Mohammad Yousuf, Arablc & Persian in Carnatic ,Ameer & Co., Chennai, First Edition, 1989.